# முசலிப் பிரதேசத்தில் தமிழ் - முஸ்லிம் நல்லுறவு: முஸ்லிம்களின் வெளியேற்றத்திற்கு முன்னரான காலம் - 1990

**J.I. Hasan, M.I.M. Jazeel**
Department of Islamic Studies,
South Eastern University of Sri Lanka.
jalaldeeninamul@gmail.com, mjazeel@hotmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

பன்மைத்துவ இலங்கையில் மூன்று தாசாப்த காலமாக இடம்பெற்று வந்த உள்நாட்டு யுத்தத்துக்குப் பின்னரான சூழ்நிலையில் இன நல்லுறவு என்ற எண்ணக்கரு ஆய்வாளர்களின் கரிசனைப் பெற்ற ஒரு பிரதான விடயமாகும். இந்தவகையில் மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேசத்தில் முஸ்லிம்களின் வெளியேற்றத்திற்கு முன்னர் (1990) தமிழ் - முஸ்லிம் உறவு எவ்வாறு காணப்பட்டது என்பதை கண்டறிவது இவ் ஆய்வின் நோக்கமாகும். பண்புசார் அடிப்படையில் அமையும் இவ்வாய்வு, நேர்காணல் முறை மூலம் பெறப்பட்ட முதலாம் நிலைத் தரவுகளை, குறியீட்டல் (coding) முறைமையூடாக பகுப்பாய்வுக்குட்படுத்தியுள்ளது. முசலிப் பிரதேசத்தில் முஸ்லிம்களின் வெளியேற்றத்திற்கு முன்னர் தமிழ் - முஸ்லிம் ஆகிய இரு சமூகங்களிடையே அரசியல், பொருளாதார, சமூக, சமய, கலாசார, கல்வி போன்ற சகல துறைகளிலும் நல்லுறவு பேணப்பட்டுள்ளது என்பது இவ்வாய்வில் கண்டறியப்பட்ட விடயமாகும். அந் நல்லுறவுக்கு இரு இனங்களின் தாய்மொழியாக தமிழ் காணப்பட்டமை, அயல் கிராம வாழ்க்கை முறைமை போன்றன அடிப்படை உறவுப் பாலமாக திகழ்ந்துள்ளன. பழைய இன நல்லுறவை மீண்டும் நினைவுபடுத்துவதாகவும், தமிழ் - முஸ்லிம் உறவில் புதியதொரு மாற்றத்தினை ஏற்படுத்துவதாகவும், மற்றும் எதிர்கால ஆய்வாளர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

***பிரதான சொற்பதங்கள்:*** *இன நல்லுறவு, முசலி, தமிழ்-முஸ்லிம் உறவு, முஸ்லிம்களின்வெளியேற்றம்*

**ஆய்வுப் பின்னணி**

பல தசாப்த காலமாக இலங்கையில் இடம்பெற்று வந்த இன முரண்பாடு, ஆயுத ரீதியான போரட்டமாக மாறியமை தமிழ் - முஸ்லிம் உறவில் வெகுவான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, வடக்கு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம், காத்தான்குடி, ஏறாவூர் பிரதேசங்களில் இடம்பெற்ற முஸ்லிம்களின் படுகொலை போன்ற இனச் சுத்திகரிப்புச் செயற்பாடுகள் இவ்விரு சமூகங்களின் உறவில் மோசமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறே முசலி பிரதேசத்திலிருந்து முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதுடன், பலர் மறைமுகமாகவும், நேரடியாகவும் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர். 2002ம் ஆண்டு சமாதான உடன்படிக்கையின் பின்னர் படிப்படியாக மீள்குடியேற ஆரம்பித்த வட மாகாண முஸ்லிம்கள், 2009ம் ஆண்டு யுத்த நிறைவிற்கு பின்னர். அரசினால் முறையாக மீள்குடியேற்றப்பட்டு வருகின்றனர். முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் வடக்கின் ஏனைய பகுதிகளிலும், குறிப்பாக முசலிப் பிரதேசத்து தமிழ் - முஸ்லிம் நல்லிணக்கத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகிறது. ஏனெனில் வடமாகாணத்தின் ஏனைய பகுதிகளை விட இப்பிரதேசத்தில் அதிகமாக முஸ்லிம்கள் வாழ்வதனால், இரு இனங்களுக்குமிடையில் அரசியல், சமூக, பொருளாதார, ரீதியான போட்டிகள் அதிகமாகும். (மஸ்தான், 2008)

மேற்கூறியவாரு தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் கசப்புணர்வுகளும், முரண்பாடுகளும் காணப்பட்டபோதிலும், வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றத்திற்கு முன்னர், இவ்விரு இனங்களுக்குமிடையிலான நல்லுறவு என்பது போற்றத்தக்க வகையில் அமைந்திருந்தது. இந்த உறவின் வெளிப்பாடாகவே தங்களுக்கிடையில், இறந்த உறவினர்களை அழைப்பதற்காக

பயன்படுத்தப்படும் மாமா, காக்கா, வாப்பா, உம்மா போன்ற உறவுப் பெயர்களைப் பயன்படுத்தினர். இந்த சிறந்த நல்லிணக்கம், சகவாழ்வு பொதுவாக வட, கிழக்கு என்பதற்கு அப்பால் இவ்வாய்வுப் பிரதேசமான முசலி முழுவதும் வியாபித்திருந்தது. முசலிப் பிரதேச தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான நல்லுறவு என்பது, டாக்டர் மார்டின் லூதர் கிங் கூறுவதைப் போன்று ''ஒவ்வொரு மனிதனும் ஒருவரையொருவர் சமனாகப் பார்க்க வேண்டும், ஒவ்வொருவரின் தேவைகளை தனது தேவையாகக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும். இவ்வாறான சமுதாயமே சகவாழ்வான, சமத்துவமான சமுதாயமாகும்''.(rupersingh and pernando, 2007) அமைந்திருந்தது.

**ஆய்வின் நோக்கம்**

முசலிப் பிரதேசத்தில் முஸ்லிம்களின் வெளியேற்றத்திற்கு முன்னர் தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் காணப்பட்ட நல்லுறவு, இணைந்த செயற்பாடு பற்றி பரிசீலிப்பதை இவ்வாய்வு பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

**ஆய்வு முறையியல் (Methodology of Study)**

இவ்வாய்வானது பண்பு ரீதியானதாகும் எனவே இவ்வாய்வானது முசலிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 10 பிரதான கிராமங்களைச் சேர்ந்த 24 நபர்களிடம் பெறப்பட்ட நேர்காணல்களை மையப்படுத்தியதாகும். இக்கிராமங்களிலிருந்து தமிழர்களும் முஸ்லிம்களும் சம விகிதாசாரத்தினடிப்படையில் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டனர். மேலும் கல்வி, வயது, தொழில், பால்நிலை போன்றனவும் இத் தேர்வில் கருத்திற் கொள்ளப்பட்டன. மேற்சொன்ன முதலாம் நிலைத் தரவு தவிர்ந்து தமிழ் முஸ்லிம் உறவு தொடர்பான இலக்கியங்களும், இவ்வாய்வு தொடர்பான கோட்பாட்டு அமைப்புத் திட்டத்தினை உருவாக்க பயன்படுத்தப்பட்டன.

**கலந்துரையாடலும், பெறுபேறுகளும்.**

முசலிப் பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான நல்லுறவானது அந்நியொன்னியமாகவும், பரஸ்பரம், இணைந்து செயலாற்றுதல் போன்றடிப்படைகளில் அமைந்திருந்தது. இந் நல்லிணக்கம் சகல துறைகளிலும் இருந்ததை பின்வரும் நேர்காணல் தெளிவுபடுத்துகின்றது. ''வேதங்கள்தான் மாற்றமாக இருந்தது தவிர நாங்கள் ஒரே தாய் பிள்ளைகள் போல் வாழ்ந்தோம்''(அலி, 2015) தமிழ் - முஸ்லிம் நல்லுறவு அரசியல், பொருளாதார, சமூக, சமய, கலாசார, கல்வி, திருமணம் போன்ற அனைத்து துறைகளிலும் அமைந்து இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையில் சகல அம்சங்களிலும் நல்லுறவு பேணப்பட்டமைக்கு புவியியல், மொழி போன்றன அடிப்படைக் காரணிகளாக அமைந்தன. அதாவது, நிலத் தோற்ற ரீதியாக முசலிப் பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம் கிராமங்கள் அருகருகே அமைந்து இருக்கின்றமை ஒரு இனம் மற்றைய இனத்தில் தங்கி வாழ வேண்டிய சூழ் நிலையை உருவாக்கியது. முசலிப் பிரதேசத்தில் பொதுவாக ஒவ்வொரு தமிழ் - முஸ்லிம் கிராமங்களும் ஏறத்தாள 100 மீற்றர் இடைவெளித் தூரத்தில் அமையப் பெற்றிருப்பதனால், பாதைகள், மருத்துவமனைகள், சந்தைகள் போன்றன இரு சமூகங்களுக்கும் பொதுவானதாகவே காணப்படுகின்றன. இதன் காரணமாக தமிழ் முஸ்லிம்களுக்கிடையில் பரஸ்பரம், புரிந்துணர்வு அதிகம் ஏற்பட்டுள்ளது என்பதை இவ்வாய்வு தெளிவுபடுத்துகின்றது.

தமிழ், முஸ்லிம் நல்லுறவிற்கு அடிப்படைக் கருவியாக அமைந்த அடுத்த விடயம் மொழியாகும். இரு இனங்களின் தாய், அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு

மொழியாக தமிழ் காணப்படுகின்றமை, ஒரு இனம் மற்றைய இனத்திலிருந்து பிரிந்தோ அல்லது வித்தியாசப்பட்டோ செல்ல முடியாத நிலையினை உருவாக்கியது. குறிப்பாக ''இலங்கை முஸ்லிம்கள் இனத்தால் தமிழர்கள், மதத்தால் முஸ்லிம்கள்'' (பழீல், 2008) என்று சேர் பொன்னம்பலம் இரமநாதன் கூறுமளவுக்கு தமிழ் மொழி இரு சமூகத்தினர்களையும் இணைக்கும் பாலமாக திகழ்துள்ளது.

தமிழ் - முஸ்லிம்களுக்கிடையிலான அரசியல் ரீதியான உறவினை எடுத்து நோக்குவோமானால், இரு சமூக மக்களும், வாக்குகளை தங்களுக்கிடையில் மாறி, மாறி அளித்துக் கொண்டதுடன், விட்டுக் கொடுப்புடனும் செயற்பட்டுள்ளனர். இதன் காரணமாகவே மன்னார் தேர்தல் தொகுதியில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக இருந்த போதிலும், பிரதேசவாரி தேர்தல் முறையின் மூலம் 1974ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இடைத் தேர்தலில் போட்டியிட்ட அப்துர் ரஹீம் என்பவர் பாராளமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். (சலாகுதீன், 2015) இவரின் சட்டமன்ற நுழைவிற்கு தமிழ் மக்களுடைய வாக்குகள் பெரிதும் பங்களிப்பு செய்திருப்பதனை இவ்வாய்விலிருந்து அறியக் கூடியதாக உள்ளது.
முசலிப் பிரதேசம், தொகுதிவாரி தேர்தல் முறை இருந்த காலகட்டத்தில் வடக்கு, கிழக்கு என்று இரண்டாக பிரிக்கப்பட்டு, அவ்விரண்டு பகுதியிலிருந்தும் தவிசாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மேற்கூறியவாறு முசலியின் இரண்டு பகுதியிலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருந்த போதிலும், 1960ம் ஆண்டுக் காலப் பகுதிகளில் முசலியின் வட பகுதிக்கு தமிழர் ஒருவர் தலைவராக வரவேண்டும் என்பதற்காக முஸ்லிம்கள் விட்டுக் கொடுப்புடன் செயற்பட்டுள்ளனர். (சலாகுதீன், 2015) அதேவேளை தேசிய கட்சிகளில் தமிழர்களும், முஸ்லிம்களும் இனைந்து இருந்தமை அவர்களின் அரசியல் ரீதியான உறவினை மேலும் வலுப்படுத்தியது.

முசலிப் பிரதேசத்தின் முதுகெலும்பு, பொருளாதாரம் என்றவகையில் விவசாயம், மீன்பிடி ஆகிய துறைகளிலும் சிறந்த நல்லுறவு காணப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் விவசாயத்தில் அதிகமாக விருப்பம் கொண்டவர்களாகத் திகழ, தமிழர்கள் மீன்பிடியினை தங்களது பிரதான தொழிலாகக் கொண்டிருந்தனர். இதன் காரணமாக தமிழர்கள் முஸ்லிம்களுக்கு தங்களது காணிகளைக் குத்தகைக்கு கொடுத்து வந்தனர். ''முஸ்லிம்களின் மீதுள்ள நம்பிக்கையின் காரணமாக எவ்வித தயக்கமும் இன்றி நாங்கள் எங்கள் நிலங்களைக் கொடுத்தோம். முஸ்லிம்களும் எங்களின் நம்பிக்கைக்கு மாற்றமாக ஒரு போதும் நடக்கவில்லை'' (திரிஸா, 2015) இப்பொருளாதார உறவிற்கு போட்டியின்மை, நம்பிக்கை, இவர்களின் ஜீவனோபாயத் தொழில்களில் காணப்பட்ட வித்தியாசம், இனப்பாகுபாடற்ற நிலை போன்ற காரணங்கள் செல்வாக்கு செலுத்தின.

முஸ்லிம்களில் ஒரு சிலரே சொந்த மீன்பிடியில் ஈடுபட்டனர். அதிகமானவர்கள் தமிழர்களுடைய வள்ளங்களில் கூலித் தொழிலாளர்களாச் சென்றார்கள். மேலும் இப்பிரதேசத்தின் சுவாரசியமான ஒரு விடயம் என்னவெனில், முஸ்லிம்களுடைய கிராமங்களிலேயே அதிகமான குளங்கள் அமையப் பெற்று இருக்கின்றன. இதன் காரணமாக நன்னீர் மீன்பிடியில் ஈடுபடக் கூடிய ஏனைய சமூதாயத்தினர்கள் இக் குளங்களிலேயே பிடிக்க வேண்டிய நிலை பெரும்பாலும் காணப்படுகின்றது. இருந்த போதிலும் முஸ்லிம்களின் இடப்பெயர்விற்கு முன்னர், தமிழ் மக்கள் எவ்வித தங்கு தயக்கமுமின்றி வந்து மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். இவ்வினைந்த செயற்பாடு பொருளாதார ரீதியாக தமிழ் - முஸ்லிம் உறவுக்கு மேலும் வலுச்சேர்த்தன.

முசலி தனித்துவமான அம்சங்களைக் கொண்டு மிளிரும் பிரதேசம் என்றவகையில் சமய, கலாசார துறைகளில் தமிழ் - முஸ்லிம்களிடையே சிறந்த உறவு பேணப்பட்டு வந்துள்ளமையினை ஆய்வுத் தகவல்கள் காட்டுகின்றன. சமய

ரீதியாக முஸ்லிம்கள் தமிழர்களின் ஆலையம், கோயில்களுக்கு சென்று அங்கு நடைபெறும் சமய ஆராதணைகளில் கலந்து கொண்டதைப் போன்று, தமிழர்களும் முஸ்லிம்களின் சமய விடயங்களில் கலந்து கொண்டனர். உதாரணமாக அரிப்பில் அமைந்திருந்த தர்ஹாப் பள்ளியான மஞ்சக் குளத்துப் பள்ளிக்கு நேர்சை வைப்பதற்க்காக தமிழர்கள் வந்து செல்லக் கூடியவர்களாக இருந்தனர். அவ்வாறே முஸ்லிம்கள் கோயில்களில் இடம்பெறும் தீ மிதித்தல் நிகழ்விலும் கூட கலந்து இருந்தமையினை இவ்வாய்வின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

சாரியணிகின்ற பண்பாடு இரு சமூகப் பெண்களுக்கிடையில் காணப்பட்டமையும் விளையாட்டு நிகழ்வுகளில் ஒன்றக் கலந்து இருந்தமையும் கலாசார ரீதியான உறவுக்கு வழிகோலியது. அத்துடன் பெருநாள்களிலும் விசே நிகழ்வுகளிலும் தங்கள் வீடுகளுக்கு சமூகமளித்து வந்தமை அதனை மேலும் மெருகூட்டியது. இவ்வாறு சமய கலாசார உறவு சிறப்பாகக் காணப்பட்டமைக்கு பாரம்பரிய சமய உறவு, சகோதரத்துவச் சிந்தனை, முஸ்லிம்களிடம் சமய ரீதியான அறிவும், பொதுவாகக் கல்வியறிவு குறைவு போன்ற காரணங்கள் பங்களிப்புச் செய்தன.
கல்வி ரீதியாக முஸ்லிம்களும் தமிழர்களும் ஒரே பாடசாலையில் இணைந்து கற்றுள்ளனர். 1961ம் ஆண்டு காலப் பகுதியில் முஸ்லிம்கள் கற்றல் நடவடிக்கைகளுக்காக அரிப்பு, கொக்குப் படையான் போன்ற தமிழ் கிராமங்களில் காணப்பட்ட பாடசாலைகளை தெரிவு செய்தது போன்று, பிற்பட்ட காலப்பகுதியில் அதாவது 1980க்கு பிறகு தமிழர்கள் முஸ்லிம் பாடசாலைகளை கற்றலுக்காக தேர்வு செய்தனர். இவ்வாறு பாடசாலைகளில் ஒன்றாக இணைந்து கல்வி கற்ற காலப்பகுதியில் தங்களது வீடுகளுக்கு வந்து செல்பவர்களாகவும், சில நேரங்களில் வீடுகளில் தங்கக் கூடியவர்களாவும் காணப்பட்டுள்ளனர். இவ்வாறு பாடசாலையில் பழகிய தமிழ், முஸ்லிம் நண்பர்கள் இன்றும் தங்களுக்கிடையில் சிறந்த நல்லுறவைப் பேணி வருகின்றமையினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

முசலிப் பிரதேசத்தில் தமிழ் முஸ்லிம் உறவினை மேலும் வர்ணப்படுத்தும் வகையில் கலப்புத் திருமணம் இருந்தமையினை நேர்காணல் மூலம் அறியக் கிடைத்தது. உதாரணமாக சிலாவத்துறையினைச் சேரந்த அஸீஸ் அண்ணாவியார் என்ற முஸ்லிம், அரிப்பைச் சேர்ந்த ஒரு தமிழ் பெண்னை திருமணம் செய்து இருந்ததோடு, சிலாவத்துறையினைச் சேரந்த அஸ்மா பீவி, அரிப்பைச் சேர்ந்த மிக்கள் என்பவரை திருமணம் செய்திருந்தார். (அலியார், 2015) இவ்வாறு பல கலப்புத் திருமணங்கள் இடம்பெற்ற போதிலும் அவை தமிழ் - முஸ்லிம் உறவில் எவ்விதப் பாதிப்புக்களையும் ஏற்படுத்தவில்லை. அதற்கு மாறாக திருமணம் செய்து கொண்டவர்களின் குடும்பங்கள் சமய, இனப் பாகுபாட்டுக்கு அப்பால் இறத்த உறவினர்கள் போன்று உறவாடினர்.

மேற்கூறியவாறு சகல துறைகளிலும் சிறப்பாக தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் நல்லுறவு பேணப்பட்டமைக்கு இரு இனங்களின் தாய்மொழி தமிழ், அயல் கிராம வாழ்கை முறை, என்பன அடிப்படைக் காரணிகளாக அமைந்தன. இவைகளையே இவ்வாய்வும் எடுத்தியம்புகின்றது.

**முடிவுரை**

முசலிப் பிரதேசத்தில் முஸ்லிம்களின் வெளியேற்றத்திற்கு முன்னர் தமிழ் - முஸ்லிம்களுக்கிடையே நல்லிணக்கம், இணைந்த செயற்பாடு, என்பன உயர்ந்த நிலையில் அமைந்திருந்தது. தமிழ், முஸ்லிம் கிராமங்கள் அருகருகே அமைந்திருந்தமை, ஒரே தமிழ் மொழி பழக்க வழங்கங்கள் என்பன உறவுக்கு அஸ்திவாரமாக அமைந்திருந்தது. இரு சமூகமும் அனைத்து துறைகளிலும் உறவு நிலை கொண்டு இருந்தமை, ஒருவர் மற்றவரிடம் தங்கியும், கூட்டு செயற்பாட்டுடன் வாழவும் வழிகோலியது. இவ்வாய்வு தமிழ், முஸ்லிம்

சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம், நல்லுறவினை கட்டியெழுப்புவதற்காக விழிப்புணர்ச்சி செயற்பாட்டிற்கு ஆதாரமாக அமையலாம்.

**உசாத்துணைகள்**

1. ஹஸ்புல்லாஹ், எஸ். எச். (1997). இலங்கையின் இனப்பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களும் தொகுதி 5 – முசலி முஸ்லிம்கள். கொழும்பு: வடமாகாண முஸ்லிம் உரிமை நிறுவனம்.
*2. பழீல், எஸ் . எச். (2008). முஸ்லிம் - தமிழ் சகவாழ்வு. இஸ்லாமிய சிந்தனை. பேருவளை: ஜாமியா நளீமியா.*
*3. மஸ்தான், எம். எம். (2015). வடக்கு முஸ்லிம்களின் பலவந்தமான வெளியேற்றம் 1990. முசலி: முசலி இளைஞர் ஒன்றியம்.*
*4. Rupesingh, Fernando. (2007). nonviolent coexistence: Moving Communities beyond Fear, Suspicion, and the Weapon of war. Maharagama: Foundation for Co-Existence.*
*5. ரஸாக் , அலி. (2005). இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வும் முஸ்லிம்களும். ஒலுவில்: அஸ்ரப் ஞாபகார்த்த தகவல் வள நிலையம் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக் கழகம்.*

**நேர்காணல்கள்**

1. சலாகுதீன். எஸ், (2015), முசலிப் பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையிலான நல்லுறவு. நேர்காணல் : மரச்சிக்கட்டி, முள்ளிக் குளம் இணைந்த பகுதி. 3.6.2015.
2. அலி, பி. எம், (2015), முசலிப் பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையிலான நல்லுறவு. நேர்காணல் : pp பொட்கேனி. 18.5.2015.
3. திரிஸா, எஸ். (2015), முசலிப் பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையிலான நல்லுறவு. நேர்காணல்: சவேரியார் புரம். 19.5.2015.
4. அலியார், எம். எஸ். எம். (2015), முசலிப் பிரதேசத்தில் தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையிலான நல்லுறவு. நேர்காணல் : வெளிமேலை. 19.5.2015.